Newbec

20 ஜனவரி 2018

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 2ம் ஞாயிறு

## திருமுழுக்குப் பெற்று அனுப்படுதல்



மாதாந்திர கருப்பொருள்:

### கிறிஸ்துவில் நம்மை இணைக்கிறது

# புத்துணர்வும் புத்தெழுச்சியும்

திருமுழுக்கின் போது நாம் பெறும் ஆன்மீகக் கனிகளில் ஒன்று, தூய ஆவி நம்மோடு வாசம் செய்ய வருகிறார். ஆனால், தூய ஆவியின் வரவையும் ஆற்றலையும் நம்மில் பலர் உணருவதில்லை. தூய ஆவி இவ்வாறுதான் இருப்பார் என்ற எண்ணத்தோடு நாம் வளர்ந்திருப்பது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். இதனால் தூய ஆவி யார் என்ற உண்மையான பொருள் விளங்காமல் போய்விடுகிறது. எடுத்துக்காட்டாக, புறா பொதுவாக தூய ஆவியின் சின்னமாக இருக்கிறது. புறா மென்மையான, தூய்மையான பறவை என்ற கருத்து நிலவுகிறது. ஆனால் புறா சின்னம், தூய ஆவியின் தெய்வீகத்தையும் வலிமையையும் ஆற்றலையும் வெளிப்படுத்துவதில்லை.

இதன் காரணமாகவே, தூய ஆவிக்கு இதர பலச் சின்னங்களை திருஅவை பயன்படுத்துகிறது. நீர், நெருப்பு, காற்று, மேகம், ஒளி முதலியை அவற்றில் அடங்கும். இந்த ஒவ்வொரு சின்னமும், தூய ஆவியின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை வெளிப்படுத்துகிறது. வாழ்க்கையில், இயற்கையாகவே ஆற்றலையும் உயிரையும் வழங்குபவையாக இவை இருக்கின்றன. நீர், தூய்மைப்படுத்தும், புதுப்பொலிவு தரும். நெருப்பு புனிதப்படுத்தும் உஷ்ணப்படுத்தும். காற்று, எத்திசை வேண்டுமானாலும் வீசும், சக்தியை உருவாக்கும். மேகமும் ஒளியும் இயற்கையாக உயிர் வாழ்வுக்கு அத்தியாவசியமானவை. இந்த சின்னங்களைப் பயன்படுத்தி, தூய ஆவியின் தெய்வீகத்தையும் புனிதத்தையும், புதுப்பொலிவையும் உருமாற்றத்தையும் திரு அவை எடுத்துக்காட்டாக விரும்புகிறது.

மனித வரலாற்றில், திருத்துவத்தின் மூன்றாம் ஆளான தூய ஆவி, படைப்பின் ஆற்றலாகவும் புதுப்பொலிவாகவும் இருந்து வந்திருக்கிறது. இதனால்தான், எருசலத்தில் மாற்றம் ஏற்பட்டு, “புதியதொரு பெயரால் நீ அழைக்கப்படுவாய்” என இறைவாக்கினர் எசாயா முன்னுரைக்கிறார். திருப்பாடலிலும், ஆண்டவர்க்குப் புதியதொரு பாடல் பாடுங்கள் என ஆர்பரிக்கப்படுகிறது. திரு அவையில், “அருள்கொடைகள் பலவகையுண்டு, ஆனால் தூய ஆவியார் ஒருவரே” என புனித பவுல் சூட்டுகிறார். திரட்சை ரசம் தீர்ந்த போது மரியாள் தாமதியாமல் செயல்பட்டாள். இதனால்தான், இயேசுவும் முன்வந்து புதிய ரசத்தைத் தந்தார். **ஆவியால் அனைத்தும் மாறும்.**

திருமுழுக்கில் நம்மோடு வாழும் தூய ஆவி, உலகம் முழுவதும் மறைப்பரப்புப் பணியை முன்னெடுக்க நம்மை உந்துகிறார். “வாழ்வு அளிப்பவர்” என்ற மற்றொரு பெயரும் அவருக்குண்டு. உலகில் எல்லாத் திசையிலும் வாழ்வளிக்க வந்தவர் தூய ஆவி. நமது சொல், செயல் வழி மற்றவர்களுக்கு ‘வாழ்வு கொடுக்கும்’ வகையில் கிறிஸ்துவோடு இணைந்து செயல்பட தூய ஆவி நம்மை அனுப்புகிறார். அவரது குரலுக்கு செவிசாய்ப்போமாக! ✝

> ஆவியின் செயல்பாட்டிற்கு உங்கள் இதயத்தை மூடி வைக்காதீர்.
>
> - திருத்தந்தை பிரான்சிஸ்

**Scripture of the Day:**

Is. 62, 1-6;
Ps. 1-3, 7-10;
1 Cor. 12: 4-11;
John 2: 1-12

**வாரம் ஒரு வசனம்**

**தூய ஆவியில் அனைத்தும் மாறும்**

INTERNAL CIRCULATION ONLY
BUL 03/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***திருமுழுக்கு பெற்று அனுப்புதல்***
*2019 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் நம்மை இணைக்கிறது***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 2ஆம் ஞயிறு (ஆண்டு 3)** சனி 18-01-2019 - ஞாயிறு 27-01-2019

எசா:62:1-5, திபா 95:1-2(அ) 2ஆ-3, 7-8(அ) 9-10(அ) 1கொரி: 12:4-11; யோ:2:1-11

**"அனைத்து மக்களுக்கும் ஆண்டவரின் வியத்தகு செயல்களை அறிவியுங்கள்" திபா 95**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 19 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ரோஸ் - மாகரெட்) | |
| ஞாயிறு | 20 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (புனித சிசிலியா)<br>திருப்பலி (ஆ) (ம.கல்வி ஆரம்பபள்ளி)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 21 | 5.00 மா | திருப்பலி | **<u>உருவாக்கப் பயிற்சி உரை</u>**: "இன்றைய உலகில் தூதுரைப்பணியின் சீடர்கள்" |
| செவ் | 22 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 23 | 6.45 கா | திருப்பலி | *மாலை 8.00 மணிக்கு அதிச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்* ***(BECCOT)*** |
| வியா | 24 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) திரு இருதய ஆண்டவர் சிற்றாலயம் - மார்ஜெரி*** |
| வெள் | 25 | 6.45 கா | திருப்பலி | **கிறிஸ்துவ ஒற்றுமை வாரம்** - செப வழிபாடு- சிரம்பான் மெத்தோடிஸ்ட் ஆலயம். இரவு 8.00 மணி |

**பொதுக்காலம் 3ஆம் ஞரிறு (ஆண்டு 3)**

நெகே : 8: 2-4, 5-6, 8-10 தி.பா: 18: 8-9, 10, 15 1 கொரி: 12: 12-30 லூக்கா : 1: 1-4, 14-21

**"ஆண்டவரே உம் வார்த்தைகள் வாழ்வு தரும் ஆவியைக் கொடுக்கின்றன" - திபா 18**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 26 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித வேபியன்) | **மாலை 7 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 27 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (மறைக்கல்வி படிவம் 1)<br>திருப்பலி (ஆ) (ம.கல்வி ஆரம்பபள்ளி)<br>திருப்பலி (மறைக்கல்வி இடைநிலை)<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**<u>2018 *டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*</u>**

1) பங்கு காணிக்கை:
12/13 ஜனவரி 2019 - ரிம: 9,472.30
இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**2) சீனப்புத்தாண்டை முன்னிட்டு மதிய உணவு விருந்து:** ரீஜெண்ட் உணவு விடுதி /மார்ச் 03-03-2019
பகல் 12.30- விலை ரிம:50/-
தொடர்புக்கு: டோரீன் (017- 3326 007) பமேலா (016- 630 6196) நாதன் (012- 684 0750)

**3) திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனை:**
அ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (ஆ) ரிம:6.00
ஆ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (தமிழ்) ரிம:5.00
இ) 2019 விவிலிய நாட்குறிப்பு(ஆ/தமிழ்) ரிம:20.00

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம்**
ஜோசப் & ராஜேஸ்வரி 03-02-2019 காலை 11.00

**4) திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு:** குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்பாக விண்ணப்ப படிவத்தைப் பங்கு அலுவலகத்தில் பூர்த்தி செய்தபின், குருவானவரைச் சந்திக்க தேதியை முன் பதிவு செய்து கொள்ளுங்கள். திருமண முன் தயாரிப்புப் பயிற்சிகள் விரைவில் தொடங்க உள்ளன.

**5) குடும்ப வாழ்வுப் பணிக்குழு:** கத்தோலிக்க திருமண முன் தயாரிப்புப் பயிற்சிக்கு ஒரு அறிமுகம்: நோக்கம்: **"புதிய முறையில் அணுகுமுறை"** வழங்குபவர்கள்: கோலாலம்பூர் குடும்ப வாழ்வுப் பணிக்குழுவினர். நாள்:26-01-2019 மாலை 7.30 மணி. இடம் : விவிலிய அறை. இதில் புதிதாக கலந்துகொள்ள ஆர்வமுள்ள தம்பதியர்களை வரவேற்கிறோம். உங்கள் பெயர்களை திரு ஜெரி (016 - 320 5140) அல்லது ஜூலி(016 3580 702) பதிந்து கொள்ளுங்கள்.

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்**
**பீட்டர் அந்தோணி அம்பு (இறப்பு: 15-01-2019)**
**முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!**

இன்று திருப்பலியை வழி நடத்திய புனித சிசிலியா அதிசவினருக்கும், மறைக்கல்வி குழுவினருக்கும் நமது நன்றிகள்.

"சிறப்பு தூதுரைப் பணி ஆண்டு"

**திருமுழுக்குப் பெற்று அனுப்புதல் : இவ்வுலகில் திரு அவை ஒரு தூதுரைப்பணி**

- **சிறப்பு தூதுரைப் பணி ஆண்டை முன்னிட்டு 'டி' சட்டைகள் விற்பனையில் உள்ளன.** இதற்காக உங்கள் பெயர்களை முன்பதிவு செய்துகொள்ளுங்கள். நிறங்கள்: வெள்ளை/அரக்கு /பச்சை/இள நீலம் (அளவுகள் (*XS/S/M/L/XL/XXL*)
- **உருவாக்கப் <u>பயிற்சி</u> உரை:** " இன்றைய உலகில் தூதுரைப்பணியின் சீடர்கள்" வழங்குபவர்: ஜூட் அந்தோன் (கோலாலம்பூர்) நாள்: 21-01-2019 (திங்கள் - தைப்பூச பொதுவிடுமுறை) கட்டணம் ரிம:10/- உருவாக்கப் பணிக்குழு மற்றும் தூய ஆவி அருங்கொடைப் பணிக்குழுவினர் இணைந்து இதை ஏற்பாடு செய்கின்றனர்.
- **ராக்கேலின் திராட்சைத் தோட்டம்:** கருக்கலைப்பினால் மன அழுத்தத்தில் இருப்போருக்கு அதிலிருந்து விடுபடவும், இறைவனின் இரக்கத்தையும் அவரின் அளவற்ற அன்பையும், குணமளிக்கும் அருளையும் பங்கேற்பாளர்கள் பெற்றுக்கொள்ள இது ஒரு அரிய வாய்ப்பு. <u>3 நாள் / 2 இரவு</u> தங்கியிருந்து தியானத்தில் கலந்துகொள்ள அழைக்கிறோம். பினாங்கு 15-17 மார்ச் (பதிவுக்கு இறுதி நாள்: 01-03-2019) கோலாலம்பூர் 21-23 ஆகஸ்ட் (இறுதி நாள்:8-8-2019) தொடர்புக்கு: மேரி (016-419 0538)
- **மறைக்கல்வி வகுப்புகள் தொடங்கிவிட்டன.** இன்னும் பதிந்து கொள்ளாதவர்கள் தயவு செய்து அந்தந்த வகுப்புகளுக்குச் சென்று பதிந்து கொள்ளுங்கள். மேல் விவரங்களுக்கு: சூசை செல்வநாதன் (012-903 6581)
- **கிறிஸ்துவ ஒற்றுமை வாரம்** - செப வழிபாடுகள் (18-25 ஜனவரி) இந்த ஒன்றுகூடலின் கருத்துகளுக்காக செபிப்போம்.
- **மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான தியானம்:** அனைத்து மறைக்கல்வி ஆசிரியர்களும் இதில் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றீர்கள். நாள்:02-02-2019 சனிக்கிழமை காலை 8.30 - பகல் 1.00 வரை. இடம்: மினவுதல் தேவாலய மண்டபம். தியானம் வழங்குபவர்: அருட்திரு. பீட்டர் அந்தோணி (தம்பின்)

- **ஜனவரி 19 & 20 பொங்கல் திரு நாள்**

19–01–2019 (சனி) மாலை 6.30 மணிக்கு – "பொங்கல் கலை இரவு" – ஆலய மண்டபம்
20–01–2019 (ஞாயிறு) காலை 7 மணிக்கு திருப்பலி, நண்பகல் 2.30 முதல் மாலை 7 மணி வரை தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள், கலாசார நிகழ்வுகள், சிறப்புப் பட்டிமன்றம் தலைப்பு : இன்றைய காலத்தில் செல்போன்கள் (Cell Phone) தொல்லையா? துணையா? தொடர்ந்து தேநீர் விருந்து இடம்பெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
**கலை கலாச்சார நிகழ்வுகள்/பட்டிமன்றம்/ தே நீர் விருந்துபசரிப்பு** ( மண்டபத்தில்)

- **ஜனவரி 23 (புதன்) அதிச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்** - இரவு 8.00 ஆலய மண்டபம்
- **ஜனவரி 25 (வெள்) கிறிஸ்துவ ஒற்றுமை வாரம்** - செப வழிபாடு- சிரம்பான் மெத்தோடிஸ்ட் ஆலயம். இரவு 8.00 மணி - திருப்பலிகளுக்குப் பின் பதிவுகள் நடைபெறும்.
- **ஜனவரி 26 (சனி)** குழந்தைகளுக்கான திருமுழுக்கு மாலை 7.00 மணி
- **ஜனவரி 27 (ஞாயிறு) புனித வனத்து சின்னப்பர் திருவிழா** - ரஹாங் சிற்றாலயம்,- நற்கருணை ஆராதனை/திருப்பலி/ஒன்றுகூடல் - நேரம்: மாலை 5.00 மணி
- **ஜனவரி 27(ஞாயிறு) மறைக்கல்வி ஞாயிறு** (20 & 27 திருப்பலி மற்றும் இறை ஆசீர்)
- **பெப்ருவரி 8-10 (வெள்ளி- ஞாயிறு) புனித லூர்து அன்னை திருவிழா**-சாகா-ரந்தாவ்